1979 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததுபோல், அந்தக் குழுவின் அறிக்கை வந்திருக்கிறது. அதைப் பரிசீலித்து இதுகுறித்து முடிவு செய்யலாம்.

தனியார் பள்ளிகளிலிருந்து சென்னை மாநகராட்சிப் பள்ளிகளுக்கு எடுக்கப்பட்ட ஆசிரியர்கள்.

* வினா எண் 759—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) தனியார் தொடக்கப் பள்ளிகளிலிருந்து சென்னை மாநகராட்சியில் அமர்த்தப்பட்ட தலைமை ஆசிரியர்கள் மற்றும் உதவி ஆசிரியர்களுக்கான கல்வி இலாகாவின் ஆணை எண் 56461/ந. 1/67-18, நாள் 6-1-70 சென்னை மாநகராட்சி நடைமுறைப்படுத்தப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அவ்வாறு அமர்த்தப்பட்ட தலைமை ஆசிரியர்கள் உதவி ஆசிரியர்கள் முறையே எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) & (ஆ) தனியார் பள்ளிகளிலிருந்து 102 ஆசிரியர்கள் மாநகராட்சிப் பள்ளிகளில் உதவி ஆசிரியர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். இவர்களுக்கு இன்னும் 6-1-70 நாளிட்ட 56461/இ1/67 கல்வித்துறை அரசாணையின்படி ஊதியம் இன்னமும் திருத்தி அமைக்கப்படவில்லை. பரிசீலனையில் உள்ளது.

திருவல்லிபுத்தூர் நகராட்சி குடிநீர் வழங்கு திட்டம்.

* வினா எண் 760—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவில்லிபுத்தூர் நகராட்சியின் குடிநீர் திட்டத்திற்கான ஆய்வுத் தொகை ரூ. 20,800/— காட்டியது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் என்றால், அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.